பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 08 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய கைத்தறி விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

2. நாடாளுமன்ற இரு அவைகளும் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

3. கர்நாடக அரசு, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் விவகாரம் தொடர்பான சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானம், தமிழக சட்டப்பேரவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

4. ஈரானுடனான மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

5. கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ashmitha Chaliha அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

தேசிய கைத்தறி விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

இந்த தினத்தை ஒட்டி, குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கைத்தறித் துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய 3 பேருக்கு கபீர் கைத்தறி விருதுகளையும், 19 பேருக்கு தேசிய கைத்தறி விருதுகளையும் அவர் வழங்கினார்.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வளமான கைத்தறி பாரம்பரியத்தை நாடு பெருமிதத்துடன் கொண்டாடுவதாக குறிப்பிட்டுள்ளார்.

திறன், படைப்பாற்றல், அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பல தலைமுறைகளாக நாட்டின் பாரம்பரியத்தை கைத்தறி நெசவாளர்கள் பாதுகாத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புற மக்களுக்கு அதிகாரமளிப்பது, பெண்கள் தலைமையிலான வளர்ச்சி, சுயசார்பு இந்தியாவிற்கான கனவுகளை நனவாக்குவது போன்றவற்றிற்கு கைத்தறித் துறையின் வளர்ச்சி முக்கியத்துவம் வாய்ந்து என்று அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் கைத்தறி தயாரிப்புகளை வாங்கி, அதனை வீடியோ பதிவு செய்து அதனை பகிர வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

>>>>>><<<<<<

வங்கக் கவிஞர் ரபீந்திரநாத் தாகூர் நினைவுதினத்தையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா மரியாதை செலுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அவரது படைப்புகள் நாட்டின் சுதந்திர போராட்ட இயக்கத்திற்கு உத்வேகம் அளித்ததுடன், நாட்டின் ஆன்மாவாகத் திகழ்ந்தது என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தாகூர் இயற்றிய “ஜன கன மன” பாடல் தேசியகீதமாகவும், நாட்டின் ஒருமைப்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவியதன் மூலம், கல்வி, தத்துவம், மற்றும் கலாச்சாரத்தை உலக அரங்கில் நிலைநிறுத்தயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவரது இலக்கியங்கள் லட்சக்கணக்கான மக்களுக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று திரு அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாடாளுமன்ற இரு அவைகளும் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

நீட் விவாகரத்தில் மாணவர்கள் மீது காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கை உட்பட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து, மக்களவை முதலில் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியதும், எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவை நடவடிக்கைள் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்று கூடியதும், இதே கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, நண்பகல் 12 மணிவரை அவை ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியபோது, எதிர்க்கட்சிகள் கோஷங்களை எழுப்பிய நிலையில், அவை நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

UPI செயலி உள்ளிட்ட இதர டிஜிட்டல் முறையிலான பணப்பரிவர்த்தனை சேவைகளுக்கு வங்கிகள் கட்டணம் விதிக்க வகைசெய்யும் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

வங்கிகளுக்கு நீடித்த வருவாய் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வாடிக்கையாளர்கள் மற்றும் சிறு விபாயாரிகள் மேற்கொள்ளும் டிஜிட்டல்

பரிவர்த்தனைகளுக்கு சேவைக் கட்டணம் வசூலிக்க இந்த சட்டத்திருத்த மசோதா வகை செய்கிறது.

>>>>>><<<<<<

கர்நாடக அரசு, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் விவகாரம் தொடர்பான சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானம், தமிழக சட்டப்பேரவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தின் மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், காவிரி நதிநீர் பகிர்வு தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய முதலமைச்சர் திரு. விஜய், தமிழகத்திற்கான நீர் பகிர்வு குறித்து மத்திய அரசுக்கும், உச்சநீதிமன்றத்திற்கும் பல்வேறு நிலைகளில் வலியுறுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், தமிழகத்திற்கான நீர் கிடைக்கவில்லை என்றும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்கு அரசு ஒருபோதும் தயங்காது என்றும் முதலமைச்சர் உறுதிபட தெரிவித்தார்.

காவிரி டெல்டா பகுதிகளில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான தொகுப்பு நிதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

காவிரி நதி நீர் பகிர்வு விவகாரத்தில் இரு மாநிலங்களும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக திரு. விஜய் குறிப்பிட்டார்.

அஇஅதிமுக சட்டப்பேரவை தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. செல்லசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. தளி ராமச்சந்திரன், பாமக உறுப்பினர் திருமதி. சௌமியா அன்புமணி ஆகியோரும் அரசினர் தனித்தீர்மானத்திற்கு ஆதரவாக பேசினர்.

>>>>>><<<<<<

தில்லி சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

இந்த கூட்டத் தொடரின் முதல் நாளான இன்று, தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா, 2023ஆம் நிதியாண்டிற்கான தலைமை தணிக்கை அதிகாரியின் அறிக்கையை பேரவையில் சமர்ப்பித்தார்.

இந்தக் கூட்டத் தொடரில் தில்லி மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிமுறைகள் குறித்த இரண்டாவது திருத்த மசோதாவை, தில்லி கல்வி அமைச்சர் திரு. Ashish Sood தாக்கல் செய்கிறார்.

>>>>>><<<<<<

தேசிய கைத்தறி தினத்தை ஒட்டி, துணிநூல் வங்கித் திட்டத்தை நாகாலாந்து மாநில முதலமைச்சர் திரு. Neiphiu Rio இன்று தொடங்கி வைத்தார்.

மாநிலத் தலைநகர் கோஹிமாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், இந்த திட்டம், அம்மாநில நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், கைத்தறி துறையை வலுப்படுத்தவும் உதவும் என்று தெரிவித்தார்.

இந்த துணிநூல் வங்கித் திட்டம், Toluvi, Dimapur ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழில்துறை மையங்களில் தொடங்கப்படவுள்ளது.

நெசவாளர்களுக்கு தரமான நூல், குறைந்த விலையில் கிடைப்பதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

>>>>>><<<<<<

அஸ்ஸாமில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, உயிரிழந்தோர் எண்ணிக்கை 97ஆக அதிகரித்துள்ளது.

இம்மாநிலத்தின் 15 மாவட்டங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதால், ஒரு லட்சத்து 68 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

480 கிராமங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதால், அப்பகுதிகளில் வசிக்கும் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக, தொற்றுநோய் பரவாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், சுகாதாரத்துறை அதிகாரிகள் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<<**

ஈரானுடனான மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலக நாடுகளின் பாதுகாப்பு கருதி, ஈரானின் அணுஆயுதங்களை திரும்பப் பெறுவது அவசியமாகிறது என்று தெரிவித்தார்.

சண்டை நிறுத்த ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக திரு. ட்ரம்ப் கூறினார்.

இதனிடையே, அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகளின் எத்தகைய அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள தயாராக உள்ளதாக ஈரான் பாதுகாப்பு அமைச்சர் பிரிகேடியர் ஜென்ரல் Seyed Majid Ibn Reza தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

காங்கோவில் எபோலா வைரஸ் தொற்கால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தை கடந்துள்ளது.

இந்த வைரஸ் தொற்று காரணமாக, இதுவரை ஆயிரத்து 850 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

694 நோயாளிகள், மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், 793 பேர் இந்த தொற்றிலிருந்து மீண்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ashmitha Chaliha அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், அவர் 20-22, 21-15, 21-19 என்ற புள்ளிகணக்கில் ஜப்பானின் Hine Akechi -ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் Rakshitha Sree-யும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--------------

St-Louis செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Praggnanandhaa சாம்பியன் பட்டம் வென்றார்.

இப்போட்டியில் 23 புள்ளிகள் பெற்று அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

**>>>>>><<<<<<**

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இம்மாதம் 28ஆம் தேதி துபாயில் தொடங்குகிறது.

இதில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட் 8 நாடுகள் பங்கேற்கின்றன. முதல் போட்டியில் தாய்லாந்து-ஹாங்காங் அணியை எதிர்கொள்கிறது.

செப்டம்பர் 5ஆம் தேதி நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா- பாகிஸ்தானை எதிர்த்து விளையாடுகிறது.

>>>>>><<<<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியின் ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் Basant இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் Mohammed Ashfaq அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>><<<<<<